பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

10 08 2024 7 15

சனிக்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

- கேரள மாநிலம் வயநாட்டில் ஏற்பட்ட நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் மீட்புப் பணிகளை பார்வையிடுவதற்காக பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று வயநாடு செல்கிறார்.
- பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் 24 ஆயிரத்து 657 கோடி ரூபாய் மதிப்பிலான ரயில்வே திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.
- வெளியுறவுத்துறை செயலாளர் திரு. விக்ரம் மிஸ்ரி இரண்டு நாள் பயணமாக நேபாளம் செல்கிறார்.
- ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பைச் சேர்ந்த தீவிரவாதி ஒருவர் தில்லி காவல்துறையின் சிறப்புப் பிரிவால் கைது செய்யப்பட்டுள்ளார்.
- பாரீஸ் ஒலிம்பிக் 57 கிலோ எடைப்பிரிவு மல்யுத்தப் போட்டியில் இந்தியாவின் 21 வயது இளம் வீரர் அமன் ஷெராவத் வெண்கலப் பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளார்.

*---- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

கேரள மாநிலம் வயநாட்டில் ஏற்பட்ட நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் மீட்புப் பணிகளை பார்வையிடுவதற்காக பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று வயநாடு செல்கிறார்.

கன்னூருக்கு வரும் பிரதமர் அங்கிருந்து ஹெலிகாப்டர் மூலமாக நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட இடத்தைப் பார்வையிடுகிறார்.

அதன் பின்னர் அந்தப் பகுதிக்கு செல்லும் பிரதமர், மீட்புப் பணிகளில் ஈடுபட்டு வரும் குழுவினரை சந்தித்துப் பேச உள்ளார்.

நிவாரண முகாம்கள், மருத்துவமனைக்கு செல்லும் அவர், பாதிக்கப்பட்டவர்களிடம் நேரடியாக உரையாடுகிறார்.

நிலச்சரிவு குறித்தும், அங்கு நடைபெற்று வரும் மீட்புப் பணிகள் குறித்தும் மாநில அரசு மற்றும் உயரதிகாரிகளுடன் அவர் ஆலோசனை நடத்துகிறார்.

<<<<>>>>

பிரதமரின் வீடு கட்டும் திட்டத்தின் கீழ் 3 கோடி புதிய வீடுகள் கட்டப்படும் என்று தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று மத்திய அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

அப்போது பேசிய அவர், பிரதமரின் வீடு கட்டும் திட்டத்தின் இரண்டாவது கட்டமாக 2024-25ஆம் ஆண்டு முதல் 2028-29ஆம் ஆண்டு வரையிலான திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்தப் புதிய திட்டத்தின் மூலம் கிராமப்புரங்களில் 2 கோடி வீடுகளும், நகர்ப்புறத்தில் ஒரு கோடி வீடுகளும் கட்டப்படும் என்றார்.

இந்தத் திட்டத்திற்காக 3 லட்சத்து 60 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தோட்டக்கலைத்துறையில் புரட்சியை ஏற்படுத்தும் விதத்தில் சுமார் ஆயிரத்து 765 கோடி ரூபாய் முதலீடு செய்யப்படும் என்றும், அதன் மூலம் விவசாயிகள் பயன்பெறுவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பின்படி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான இடஒதுக்கீட்டு முறை அரசியலமைப்பு சட்டப்படி நடைமுறைப்படுத்துவதற்கு மத்திய அமைச்சரவை முடிவு செய்துள்ளதாகவும் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறினார்.

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் 24 ஆயிரத்து 657 கோடி ரூபாய் மதிப்பிலான ரயில்வே திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

7 மாநிலங்களில் உள்ள 14 மாவட்டங்களில் இந்த திட்டம் அமல்படுத்தப்பட உள்ளது.

இதன்படி ஒடிசா, மகாராஷ்டிரா, ஆந்திரப்பிரதேசம், ஜார்கண்ட், பீஹார், தெலங்கானா மற்றும் மேற்குவங்கம் ஆகிய மாநிலங்கள் இந்தத் திட்டத்தின்கீழ் பயனடையும் என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

குறிப்பாக யுனேஸ்கோ அமைப்பு மூலமாக உலக பாரம்பரிய இடமாக அறிவிக்கப்பட்டுள்ள மகாராஷ்டிராவின் அஜந்தா குகைப் பகுதிக்கு ரயில்சேவை விரிவுபடுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் 3 நாள் பயணமாக மாலத்தீவு சென்றுள்ளார்.

அவரை மாலத்தீவு வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. மூஸா ஸமீர் விமான நிலையத்தில் வரவேற்றார்.

இந்தியாவின் அண்டை நாடுகளுக்கு முக்கியத்துவம் என்ற அடிப்படையில் மாலத்தீவுகள் மிக முக்கியமான இடத்தைப் பிடித்துள்ளதாக சமூக வலைதளப் பதிவில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மாலத்தீவின் அதிபர் மற்றும் அமைச்சர்களுடன் நடைபெறும் பேச்சுவார்த்தைகள் இருதரப்புக்கும் பயனுள்ளதாக இருக்கும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கரின் மாலத்தீவு பயணம் இரு நாடுகளுக்கு இடையிலான நட்புறவை மேலும் வலுவடையச் செய்யும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

ஆடை உற்பத்தி மற்றும் ஜவுளித்துறை மேம்பாட்டிற்காக பிரதமரின் மிகப்பெரிய ஒருங்கிணைந்த ஜவுளி மற்றும் ஆடை தயாரிப்பு பூங்கா அமைக்க 4 ஆயிரத்து 445 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக ஜவுளித்துறைக்கான இணையமைச்சர் திரு. பபித்ரா மார்கரிடா மாநிலங்களவையில் தெரிவித்துள்ளார்.

இதன்படி தமிழ்நாட்டில் விருதுநகர் மாவட்டம், தெலங்கானாவில் வாரங்கல், குஜராத்தில் நவ்சாரி, கர்நாடகாவில் கல்புர்கி, மத்தியப்பிரதேசத்தில் தார், உத்தரப்பிரதேசத்தில் லக்னோ, மகாராஷ்டிராவில் அமராவதி ஆகிய இடங்களில் இந்தப் பூங்காக்கள் அமைக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

இந்தப் பூங்காக்கள் அமைக்கப்பட்ட பிறகு ஒவ்வொரு பூங்காவும் சுமார் 10 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டை ஈர்க்கக்கூடியதாக அமையும் என்றும் திரு. பபித்ரா மார்கரிடா தெரிவித்தார்.

<<<<>>>>

வெளியுறவுத்துறை செயலாளர் திரு. விக்ரம் மிஸ்ரி இரண்டு நாள் பயணமாக நாளை நேபாள நாட்டிற்கு செல்கிறார்.

இந்தியா – நேபாளம் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்தும் விதத்தில் இந்தப் பயணம் அமையும் என்று வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

நேபாள நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. சேவா லாம்சால் அழைப்பின் பேரில் திரு. விக்ரம் மிஸ்ரி அங்கு பயணம் மேற்கொள்கிறார்.

<<<<>>>>

தில்லி மதுபான் கொள்கை முறைகேடு வழக்கில் கைது செய்யப்பட்டு திஹார் சிறையில் இருந்த தில்லி முன்னாள் துணை முதலமைச்சரும், ஆம் ஆத்மி கட்சியின் மூத்த தலைவருமான திரு. மணீஷ் சிசோடியா ஜாமீனில் வெளிவந்துள்ளார்.

முன்னதாக நேற்று உச்சநீதிமன்றம் ஜாமீன் வழங்கியதை அடுத்து அவர் சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டார்.

17 மாதங்களாக சிறையில் இருந்து வந்த அவர், இதுவரை விசாரணை தொடங்கப்படவில்லை என்று கூறி அவரது வழக்கறிஞர் உச்சநீதிமன்றத்தில் வாதாடியதை அடுத்து, அமலாக்கப்பிரிவு மற்றும் சிபிஐ தாக்கல் செய்த வழக்குகளில் திரு. மணீஷ் சிசோடியாவுக்கு ஜாமீன் வழங்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

தில்லி காவல்துறையின் சிறப்புப் பிரிவு ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பைச் சேர்ந்த தீவிரவாதி ஒருவரை கைது செய்துள்ளது.

கடந்த ஓராண்டாக தேடப்பட்டு வந்த இந்த தீவிரவாதி குறித்து தகவல் தெரிவிப்போருக்கு 3 லட்சம் ரூபாய் வழங்கப்படும் என்று தில்லி காவல்துறை அறிவித்திருந்தது.

மும்பை, தில்லி ஆகிய இடங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள வழக்குகள் தொடர்பாக தேசிய புலனாய்வு முகமை இந்த தீவிரவாதியை தேடி வந்தது.

பிடிபட்ட தீவிரவாதியிடமிருந்து ஒரு கைத்துப்பாக்கி மற்றும் இரண்டு கைப்பேசிகள் கைப்பற்றப்பட்டதாக தில்லி காவல்துறை தெரிவித்துள்ளது.

<<<<>>>>

மிசோரம், அசாம் மாநிலங்களுக்கு இடையிலான எல்லைப் பகுதி சர்ச்சையை முடிவுக்குக் கொண்டு வரும் விதத்தில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன.

மிசோரம் தலைநகர் ஐஸ்வாலில் இரு மாநிலங்களின் அமைச்சரவை இடையிலான கூட்டம் நான்காவது முறையாக நடைபெற்றது.

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு எல்லைப் பகுதி குறித்த சர்ச்சையில் கலவரம் ஏற்பட்டது. இதனையடுத்து இரு மாநிலங்களுக்கு இடையே பதற்றம் நிலவி வந்தது.

இந்தக் கூட்டத்திற்குப் பிறகு அசாம் எல்லைப் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. **Atul Bora** செய்தியாளர்களிடம் பேசினார்.

இரு மாநிலங்களுக்கு இடையே நடைபெற்ற இந்தப் பேச்சுவார்த்தை சுமூகமாக நடைபெற்றதாகவும், இரு மாநிலங்களும் எல்லைப் பகுதியைப் பாதுகாக்கும் விதத்தில் நடவடிக்கைகள் எடுப்பது என்று அவர் தெரிவித்தார்.

எல்லைப் பகுதிகளை ஒட்டியுள்ள மாவட்டங்களில் கலாச்சாரம் மற்றும் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

எல்லைப்பகுதி பிரச்சினை விரைவில் தீர்க்கப்படும் என்று மிசோரம் மாநில உள்துறை அமைச்சர் திரு. கே. சப்தங்கா தெரிவித்துள்ளார்.

இரு மாநிலங்களைச் சேர்ந்த அமைச்சர்களுக்கு இடையிலான பேச்சுவார்த்தையின் முடிவுகளை உயரதிகாரிகள் நடைமுறைப்படுத்துவார்கள் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

<<<<>>>>

அந்தமான் போர்ட்பிளேர் கடல்பகுதியில் மருத்துவ உதவி தேவைப்பட்ட பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த ஊழியரை இந்திய கடலோர காவல்படையினர் மீட்டு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்துள்ளனர்.

ஒலிம்பியா ஜி.ஆர் என்ற பிலிப்பைன்ஸ் நாட்டுக் கப்பலில் பயணம் செய்த ஊழியர் ஒருவருக்கு திடீர் உடல்நலக்குறைவு ஏற்பட்டது.

இதனையடுத்து இந்திய கடலோர காவல் படையின் உதவி கோரப்பட்டது.

உடனடியாக சி-428 என்ற கப்பல் மூலம் விரைந்த கடலோர காவல் படையினர் அந்த ஊழியரை மீட்டு தேவையான முதலுதவிகளை அளித்து பின்னர் மருத்துவமனையில் அனுமதித்தனர்.

<<<<>>>>

நாடாளுமன்றத்திற்கு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்களுக்கான பயிற்சி முகாமினை மக்களவைத் தலைவர் திரு. ஓம்பிர்லா தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அவர், மக்களவைத் தலைவர் ஒரு கட்சியினுடைய கொள்கைகளை பின்பற்றி நடக்க மாட்டார் என்றும், அனைத்து உறுப்பினர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் விதத்தில் அமைந்திருப்பதாகவும் தெரிவித்தார்.

நாடாளுமன்றக் கூட்டம் சிறப்பாக நடைபெறுவதற்கு உறுப்பினர்கள் தங்களது ஆலோசனைகளை வழங்கலாம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

18வது நாடாளுமன்றத்திற்கு புதிதாக 280 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது மகிழ்ச்சியளிப்பதாக தெரிவித்தார்.

புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்கள் புதிய சிந்தனைகளைக் கொண்டிருப்பதாகவும், மீண்டும் நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்களின் அனுபவங்களுடன் ஒன்றிணைந்து நாடாளுமன்றத்தின் நடவடிக்கைகளை அது ஆக்கப்பூர்வமாக அமைக்கும் என்றும் திரு. ஓம்பில்லா நம்பிக்கை தெரிவித்தார்.

<<<<>>>>

பாரீஸ் ஒலிம்பிக் 57 கிலோ எடைப்பிரிவு மல்யுத்தப் போட்டியில் இந்தியாவின் அமன் ஷெராவத் வெண்கலப் பதக்கம் வென்றுள்ளார்.

**Puerto Rico** நாட்டைச் சேர்ந்த **Darian Cruz**-ஐ 13-5 என்ற புள்ளிக் கணக்கில் வென்று வெண்கலப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.

ஹரியானா மாநிலத்தைச் சேர்ந்த 21 வயதான இளம் வீரர் அமன் ஷெராவத் தான் பங்கேற்ற முதல் ஒலிம்பிக் போட்டியிலேயே பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளார்.

அவருக்கு குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு. நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா ஆகியோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

ஒலிம்பிக் போட்டியில் இதுவரை இந்தியா ஒரு வெள்ளி 5 வெண்கலம் உட்பட மொத்தம் 6 பதக்கங்களை வென்றுள்ளது.

**<<<<>>>>**

ஒலிம்பிக் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்றுள்ள ஹாக்கி அணியின் வீரர் விவேக் சாகர் பிரசாத்திற்கு மத்தியப்பிரதேச அரசு ஒரு கோடி ரூபாய் பரிசு வழங்குவதாக அறிவித்துள்ளது.

அம்மாநில முதலமைச்சர் டாக்டர் மோகன் யாதவ் விவேக் சாகருடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு வாழ்த்து தெரிவித்தார்.

**<<<<>>>>**